2026–சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வே.டில்லிபாபு, கோ.கோடீஸ்வரன், ஐ.அழகேசன், எஸ்.ஜெயா, எம்.அபுதாஹீர், ஆகிய ஒரு முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை வழங்கினர். உடன் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், கீதாஆனந்தன், இரா.பாஸ்கரன், வட்ட கழக செயலாளர்கள் ஜே. செல்வேந்திரன்,டி.ரவி, மா.கோ.கருணாநிதி, பா.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன், மாவட்ட பிரதிநிதிகள் கே.பாபுகுமார், பி.திருமாறன், ஜி.ஆர்.வெங்கடேசன், அ.குப்புசாமி, தா.மனோகரன், இரா.கீர்த்திராஜ், மா.சத்யா, மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பட்ட கழக நிர்வாகிகள் பகுதி வட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பாக முகவர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்! எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. முன்னிலை!

சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்!

தமிழச்சிதங்கபாண்டியன், மு.மகேஷ்குமார், கோ.வி.லெனின், வாசுகிபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, செப்.4

சைதை மேற்கு பகுதி கழகசெயலாளரும் பத்தாவது மண்டலகுழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: கழகத்தலைவரும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர்அணி மாநிலச்செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொதுஉறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி! சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையிலும் பகுதி கழகச்செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகவுதமன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா ஆகியோர் வரவேற்பில், 05.09.2024 வியாழக்கிழமை, மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை, வி.ஜி.பி. சாலையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கலை கல்லூரி கலையரங்கத்தில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழகசெயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

மேலும் இக்கூட்டத்திற்கு தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார், சைதை தொகுதி பொறுப்பாளர் கோ.வி. லெனின், மாவட்டகழகதுணைசெயலாளரும், தொகுதி மேற்பார்வையாளருமான வாசுகிபாண்டியன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், எம்.எஸ். ஹரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, கிண்டி ஆர்.எல்.செல்வம், ஜி. கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி. பாபு, உள்ளிட்ட அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணைஅமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள், பகுதிதுணைஅமைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் ஆகியோர் பெருந்திரளாக பங்கேற்று இக்கூட்டத்தினை சிறப்பித்து தருமாறு எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உத்திரமேரூர் ஒன்றியத்தில் 600 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. - க.செல்வம் எம்.பி. வழங்கினர்! கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப். 4 -

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியில் 73 ஊராட்சிகளில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்படி 600 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. ஆகியோர் வழங்கினர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 73 ஊராட்சிகளில் குடிசை வீடுகளில் வாழ்ந்து வரும் ஏழை எளிய கிராம மக்களுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் 600 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி உத்திரமேரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஞானசேகரன், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் வான்மதி அனைவரையும் வரவேற்றார்.

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளரும் உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க. செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு 600 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கி சிறப்புரையாற்றினர்.

இறுதியாக வட்டார வளர்ச்சி அலுவலர் லோகநாதன் நன்றி கூறினார்.

புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கம்

இதனைத் தொடர்ந்து உத்திரமேரூர் அடுத்த திருப்பிலிவனம் கிராமத்தில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கும் கிராமப்புற மாணவ மாணவிகள் கல்லூரிக்கு வந்து செல்ல செங்கல்பட்டில் இருந்து சாலவாக்கம் வழியாக திருப்புலிவனம் வரை அரசு பேருந்து போக்குவரத்து தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் எம்பி ஜி. செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.

மேலும் கல்லூரி வளாகத்தில் 10 லட்சம் மதிப்பில் கலைஞர் நூற்றாண்டு முகப்பு வளைவு திறக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் இரா. நாகன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சித் தலைவர் சசிகுமார்,மாவட்ட கவுன்சிலர் சிவராமன்,அவைத் தலைவர் சுப்பராயன், கவுன்சிலர்கள் ருத்ர கோட்டி, சுகுணா சுந்தர்ராஜன், வீரம்மாள் மாயகிருஷ்ணன், நதியா கோபி, ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கூடுவாஞ்சேரியில் பி.பார்த்திபன் - பி. அனுசுயாவின் புதிய இல்லம் திறப்பு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - க. செல்வம் எம்.பி.-வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செங்கல்பட்டு,செப்.4-

செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரியில், சேப்பாக்கம் பகுதி முன்னாள் பிரதிநிதி பி. பிரபாகர் - பி. சரஸ்வதி இணையரின் புதல்வர் பி. பார்த்திபன் - பி. அனுசுயா தம்பதியர் கூடுவாஞ்சேரி ஜெயராம் நகர் சொர்க்கம் அப்பார்ட்மெண்ட் F114, F115-ல் வாங்கியுள்ள புதிய இல்லத் திறப்பு விழா 5.9.2024-வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இத்திறப்பு விழாவில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், க.செல்வம் எம்.பி., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., நகர மன்றத் தலைவர் கார்த்திக் தண்டபாணி, லோகநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமு ஜீஜேந்திரன், விக்னேஷ், அப்துல் காதர், நடராஜன், தரணிகுமார், சோலை முத்து உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

அம்பத்தூர் கிழக்குப் பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை செப் 4 -

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்து சமய அற நிலையத்துறை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் (ம) சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று சிறப்புறையாற்றுகிறார் என பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

அம்பத்தூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் தலைமையில் நாளை (5.09.2024 - வியாழக்கிழமை) இரவு 7.00 மணியளவில் சென்னை கிழக்கு மாவட்டம் வார்டு 83அ முருகன் கோயில்தெருவிவேகானந்தா நகர் மீனா மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று ஆலோசனைகள் வழங்குகிறார்.

மேலும் இக்கூட்டத்தில் பி.டி.சி. செல்வராஜ் (மாநில தொழிற்சங்க தலைவர்) ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ., (வடக்கு பகுதி செயலாளர்) பி.கே.மூர்த்தி (செயற்குழு உறுப்பினர் 7வது மண்டலகுழு தலைவர்) கலந்து கொள்கிறார்கள்

எனவே இக்கூட்டத்தில் அம்பத்தூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2, உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னாள் நிர்வாகிகள் கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எம்.டி.ஆர்.நாகராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் திருத்தணி மேற்கு ஒன்றியம் பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் பகுதிகளில் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் மாவட்ட அமைப்பாளர் ம.கிரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ துவக்கி வைத்து புதிய உறுப்பினர்களை இணைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணன், ஜி.ரவீந்திரா, ஆர்த்தி ரவி, டி. ஆர்.கே.பாபு, நெசவாளர் அணி துணை தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எம்.சுகுமாரன், டி.ஆர்.திலீபன், நிர்வாகிகள் இ.ஏ.உதயசூரியன், ஆசூர் மாணிக்கம், பொன்.சு.பாரதி, கோதண்டன் உள்பட பலர் உள்ளனர்.

சிகாகோ நகரில் - பேரன்பைப் பொழிந்து வரவேற்ற

தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சிகாகோ, செப்.4-

அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (03.09.2024) சிகாகோ சென்றார். சிகாகோ சென்றடைந்த பின்பு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், "சிகாகோவில் பேரன்பைப் பொழிந்து வரவேற்ற தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

சான் பிரான்சிஸ்கோ நகரிலிருந்து சிகாகோ நகருக்கு வந்தடைந்தேன்.

பேரன்பைப் பொழிந்து வரவேற்று நெகிழ வைத்த தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி!

இவ்வாறு முதல்வர் அவர்கள் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கைக்கு அழுத்தம் கொடுக்காமல் - ஒன்றிய அரசு

சமூக அக்கறையோடு நிதியை ஒதுக்க வேண்டுமென்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப். 4 -

தேதிய கல்விக் கொள்கைக்கு அழுத்தம் கொடுக்காமல் ஒன்றிய அரசு சமூக அக்கறையோடு நிதியை ஒதுக்க வேண்டுமென்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பு என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து 3.9.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

தேசிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசு வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்தி திணிப்புக்கான அம்சம் இருப்பதால் தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு நிராகரித்து வருகிறது. மேலும், மாநில கல்விக் கொள்கையை தமிழக அரசு வடிவமைத்து வருகிறது. அதேநேரம் பிஎம் ஸ்ரீ(பிரதமரின் பள்ளிகள்) பள்ளிகளை அமைப்பது தொடர்பாக ஆராயவும் தமிழக அரசு குழுவை நியமித்துள்ளது. எனினும், தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாததால் தமிழக கல்வி திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு தரவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

தினகரன்

செப்டம்பர் 3, 2024 சென்னைஞாயிறுமை

கல்வியில் அழுத்தம்

தேதிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஒன்றிய அரசு வலியுறுத்தி வருகிறது. ஆனால், இந்தி திணிப்புக்கான அம்சம் இருப்பதால் தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு நிராகரித்து வருகிறது. மேலும், மாநில கல்விக் கொள்கையை தமிழக அரசு வடிவமைத்து வருகிறது. அதேநேரம் பிஎம் ஸ்ரீ(பிரதமரின் பள்ளிகள்) பள்ளிகளை அமைப்பது தொடர்பாக ஆராயவும் தமிழக அரசு குழுவை நியமித்துள்ளது. எனினும், தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாததால் தமிழக கல்வி திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு தரவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

இந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் பேசியுள்ள தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அனைவருக்கும் கல்வி திட்டத்தில், ஒன்றிய அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய பங்கீட்டு தொகை ரூ.7573 கோடி இதுவரை விடுவிக்கப்படவில்லை. இதுகுறித்து, முதல் வரும் அமெரிக்கா செல்வதற்கு முன்பு ஒன்றிய அரசை வலியுறுத்தி விட்டு சென்றார். மேலும் தமிழக எம்.பிக்கள் அனைவரும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை நேரில் சந்தித்தனர். மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு இதில் அரசியல் செய்ய வேண்டாம் என்று நேரடியாக வலியுறுத்தினர். தேசிய கல்விக் கொள்கை 2020ம் ஆண்டு தான் அமல்படுத்தப்பட்டது. ஆனால் அதற்கு முன்பே அனைவருக்கும் கல்வி திட்டம் 2018ம் ஆண்டில் அமல்படுத்தப்பட்டுவிட்டது.

எனவே இந்த விஷயத்தில் அரசியல் செய்யாமல் உடனடியாக நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். தேசிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து ஒன்றிய அரசு அழுத்தம் கொடுக்கிறது. ஒன்றிய அரசு நிதி வழங்காதால் ஏற்பட்டுள்ள நிதிச் சுமையை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளை தமிழக முதல்வர் மேற்கொண்டு வருகிறார். தமிழகத்தில் உள்ள ஆசிரியர்கள் சம்பளம் உள்ளிட்ட செலவினங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் தொடர்ந்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என கூறினார்.

பிரதமரின் ஸ்ரீ பள்ளிகள் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட தமிழக அரசு தொடக்கத்தில் ஒப்புக்கொண்டது. ஆனால், இது வரை அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. கல்வியின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கும், அரசு பள்ளிகளை மேம்படுத்தவும் பிஎம் ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தை தமிழகம் ஏற்றுக்கொள்வது முக்கியம் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

இத்திட்டத்தில் டெல்லி, பஞ்சாப், மேற்கு வங்கம், தமிழகம், கேரளா ஆகிய மாநிலங்கள் இதுவரை இணையவில்லை. மும்மொழி கொள்கையில் இருந்து விலக்கு உள்பட சில கோரிக்கைகளை தமிழகம் முன்வைத்தது. ஆனால், அதை ஏற்க ஒன்றிய அரசு மறுத்துவிட்டதால் தமிழகம் சேரவில்லை. இதனால் கடந்த கல்வியாண்டில் (2023-24) 4வது தவணை நிதியுதவியும், நடப்பு கல்வியாண்டில் (2024-25) முதல் தவணை நிதியையும் ஒன்றிய அரசு நிறுத்தியுள்ளது. அதிமுக, பாமக, காங்கிரஸ் மற்றும் கல்வியாளர்கள், ஆசிரியர் சங்கங்கள் உள்பட பல்வேறு தரப்பிலும் நிதியை விடுவிக்க வலியுறுத்தப்பட்டு வருகிறது.

15,000 ஆசிரியர்களின் ஊதியம் மற்றும் மாணவர்களின் கல்வி நிலையை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு தேசிய கல்வி கொள்கைக்கு அழுத்தம் கொடுக்காமல், சமூக அக்கறையோடு இரண்டு தவணை நிதியை ஒதுக்க வேண்டும் என்பதே அனைத்து தரப்பு மக்களின் மிகுந்த எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் இல்லத் திருமணம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - பி.மூர்த்தி - சா.சி.சிவசங்கர் - சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை, செப். 4-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் - மு.செ.கணேசன் ஆகியோரின் புதல்வி மு.செ.க.எழில் நிலா - பி. ரோகித்ராஜ் ஆகியோரின் திருமணம், செப்டம்பர் 8 - ஞாயிற்றுக்கிழமை அன்று சிவகங்கை மாவட்டம் - ஒக்கூரில் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் கலந்துகொண்டு மணவிழாவினை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இம்மணவிழாவிற்கு அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, பி.மூர்த்தி, சா.சி.சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விபரம் வருமாறு:-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் -சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் மு.செ. கணேசன் ஆகியோரின் மகள் ஹரிணி என்ற எழில்நிலா - பெரம்பலூர் மாவட்டம் பசும்பலூர் ரா. பிச்சப்பிள்ளை - பி. விஜயா ஆகியோரின் மகன் ரவிசங்கர் என்ற பி.ரோஹித் ராஜ் ஆகியோரது திருமணம் 8.9.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிஅளவில் சிவகங்கை மாவட் டம் - ஒக்கூர் - அண்ணா நகரில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு மாவட்டச்செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.

சிவகங்கை வடக்கு ஒன்றியச் செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர்கள் எஸ். ரகுபதி, பி. மூர்த்தி, சா.சி.சிவசங்கர் சிவ.வீ. மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில மகளிரணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம்.துரை ஆனந்த், சிவகங்கை தெற்கு ஒன்றியச் செயலாளர் ம.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., திருமதி. பிரேமா பெரியகருப்பன், கே.கே.செல்லப்பாண்டியன், தா.சேங்கை மாறன், இ.எம். சுதர்சன நாச்சியப்பன், பவானி ராஜேந்திரன், அ. கணேசன், எஸ்.மாங்குடி, எம்.சின்னத்துரை, ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம்.மணி முத்து, எஸ்.குணசேகரன், சுப.துரைராஜ், நாகனி பி.செந்தில்குமார், வி.ராஜசேகரன், சுப.மதியரசன், உடையப்பா சுப்பிரமணியன், கே. மாரியப்பன் கென்னடி, தா. ராமையா, புதுக் கோட்டை விஜயா, கதி. ராஜ்குமார், சல்மா அப்துல் மாலிக், ச. இன்பலாதன், மருத்துவர் ப. மீ.யாழினி, சேலம் சுஜாதா உள்பட பலரும் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி 139வது வட்ட தி.மு.க. சார்பில் 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை ஜாபர்கான்பேட்டை கலைஞர் பவளவிழா சமூக நலக்கூடத்தில் வட்ட செயலாளர் அட்கோகமலநாதன் தலைமையிலும் பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், சிறுபாண்மை அணியின் மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக், ஆகியோர் முன்னிலையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட துணைச்செயலாளர் வாசுகிபாண்டியன், தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின், பகுதி செயலாளரும் பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினார்கள். பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., ந.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞர்அணி துணைஅமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், உள்ளிட்ட மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளை சார்ந்த நிர்வாகிகள், வட்டகழக நிர்வாகிகள், பாகபொறுப்பாளர்கள், கழகமுன்னோடிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.